**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.466/2021**

**தேதி : 04.12.2023**

**வா.சா.3– திரு. கார்த்திக்**

**சாட்சி அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில்)**

நான் டோபி வேலை செய்து வருகிறேன். நான் கோசவிநாயகர் கோவில் அருகில் 2007 ஆம் ஆண்டிலிருந்து வண்டியில் கடை வைத்திருக்கிறேன். அதன் அருகில் உள்ள அனைவருக்குமே நான் தான் இஸ்திரி மற்றும் சலவை செய்கிறேன் என்றால் சரிதான். முத்துக்குமார், பழனிச்சாமி, வஜ்ரவேல் என்னிடம் தான் சலவை செய்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களுடைய வீடு எந்த இடத்தில் உள்ளது என்றால் நடுத்தெருவில் உள்ளது. தற்போது வாடகை வீட்டில் அங்காளம்மன் கோவில் அருகில் இருக்கிறார்கள். எனது கடைக்குப்பின் இருப்பது வாதிகளின் பூர்வீக வீடா என்றால் எனக்கு தெரியாது. வாதிகளின் இடத்தில் கட்டப்பட்டு வரும் கடைக்கு நான் முன்பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் துணி வாங்கும்போது வீட்டுக்கு வெளியில் வைத்தே என்னிடம் துணிகளைக் கொடுத்து அனுப்பிவிடுவார்கள் என்றால் சரியல்ல, நான் வீட்டுக்குள் சென்றே துணிகளை வாங்குவேன். நான் எந்த வீட்டுக்குள் போனாலும் சமையலறை, கழிப்பறை வரை செல்வேனா என்றால் சமையலறைக்கு செல்வது கிடையாது, தேவைப்பட்டால் கழிப்பறையை பயன்படுத்துவேன். பிரதிவாதி பழனிக்குமார் வீட்டுக்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். அவர்களது கழிப்பறை எங்கு உள்ளது என்றால் தெரியாது. கழிப்பறையை உடைத்த சமயம் நான் அங்கு இருந்தேனா என்றால் இல்லை. கழிப்பறையை அடைத்து வைத்து சாமான்கள் போட்டுவைத்துள்ளதை நான் பார்த்தேனா என்றால் நான் அங்கு செல்லும்போது பார்த்தேன். முள்வேலியும் போட்டு வைத்திருந்தார்கள். கழிப்பறை கதவில் என்ன கலர் பெயிண்ட் அடித்து வைத்திருந்தார்கள் என்றால் அது தகரத்தால் ஆன கதவு. கழிப்பறை இடம் யார் பெயரில் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு யார் வரி செலுத்தி வருகிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டின் அளவு எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. எதுவுமே தெரியாத நான் வஜ்ரவேல் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாக சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக

பார்க்கவில்லை என்றாலும், வஜ்ரவேல் கடையை வாடகைக்கு கேட்டுள்ளதால் நான் அவருக்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2023.12.05 18:37:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.